[19th December 1961

Sri A. GOVINDASAMY : குழந்தைகளுக்கென நன்கொடையாக வந்த பால் துர்விநியோகம் செய்யப்பட்டு, அந்த முறையிலே யாராவது கண்டுபிடிக்கப்பட்டு, அத்தகைய தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட்டு இருக்கிறார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதுவரைக்கும் நல்ல வேளையாக யாராலும் அத்தகைய தவறுகள் ஏற்படவில்லை.

Sri A. A. RASHEED : Sir, may I know whether it is a gift from the people of the United States or from the Government of the United States? Are any cash grants received from the Government of the United States?

The Hon Sri C. SUBRAMANIAM : No cash grant is received. This aid is routed through CARE Organisation of America.

Sri K. VINAYAKAM : In the event of the success of the scheme, would our Government take steps to extend this for the next year also?

The Hon. Sri C. SUBRAMANIAM : It is bound to be extended not only for the next year but for many more years.

Adulteration of oil

*** 2206 Q.—Sri V. K. KOTHANDARAMAN :** கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உணவு கலப்படத்தடுப்புச் சட்டத்தின்படி எண்ணெயில் எத்தனை சத விகிதம் கொழுப்புச் சத்து அமிலமிருந்தால் தண்டிக்கப்படுகிறது ;

(இ) 1959-60-ல் நமது ராஜ்யத்தில் எத்தனை எண்ணெய் வியாபாரிகளுக்கு அபராதம் அல்லது தண்டனை விதிக்கப் பட்டுள்ளது ?

The Hon. Sri M. A. MANICKAVELU : ( ) Free fatty acid in edible oils should not be more than 3 per cent.

(இ) A statement [a] is placed on the table of the House.

Sri V. K. KOTHANDARAMAN : இந்த ஸ்டேட்மெண்டில் 305 பேர்களில் 184 பேர்களுக்குத் தான் தண்டனை கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டிருக்கிறது. தண்டனை என்று சொன்னால், அபராதம் விதிக்கப்பட்டதா அல்லது கடின காவல் தண்டனை விதிக்கப் பட்டதா ? எந்தமாதிரி தண்டனை விதிக்கப்பட்டது ?

The Hon. Sri M. A. MANICKAVELU : தண்டனையில் அபராதமும் உண்டு, சிறை தண்டனையும் உண்டு. ஆனால், இப்பொழுது என்னிடம் அது பற்றி விவரம் இல்லை, 'ப்ரேக்-அப்' இல்லை.

---

[a] Printed as Appendix I on page 290 infra.